மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், தி/ள். ம. நல்லையா உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் பிரதிநிதிகள் இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் பற்றி விவரித்தபின், பொதுமக்கள் வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் எனக் கூறினார்.

<u>வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர்:</u>

வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர் அவர்கள் அனைவரையும் வரவேற்று பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தை தொடங்கி வைத்து இத்திட்டப் பிரதிநிதிகளைத் திட்டம் குறித்து விவரிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

<u>திட்டப் பிரதிநிதி:</u>

திரு. கோபிநாத், முதுநிலை சுற்றுச்சூழல் பொறியாளர், ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்கள் தி/ள். ம. நல்லையா உடைகல் மற்றும் கிராவல் குவாரி சார்பாக இத்திட்டம் குறித்தான விவரங்கள் வரைவு மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை நிழற்படம் (Power Point

Presentation) மூலம் விரிவாக எடுத்துரைத்தார். இதன் விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பு – 'ஆ').

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:</u>

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊர் விபரம் சொல்லி தங்களது கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்துவடிவிலோ பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

<u>பொதுமக்கள் கருத்து கேட்பு:</u>

1. <u>திரு. திருவருட்செல்வம், மேலூர் கிராமம்</u>

நான் மேலூர் கிராமம் திருவருட்செல்வம் எனது பெயர். இந்த கல்குவாரி அமைப்பதற்கு எனக்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை. ஆனால், சில வழிமுறைகள் செய்தால் நன்றாக இருக்கும் என்று கூறினார். ஏனென்றால் இங்கு வெடிக்கும் பொழுது வீடெல்லாம் அதிர்கின்றது அது ஒன்று. இரண்டாவதாக அவர்கள் சாயங்காலம் நான்கு மணியளவில் வெடி வைக்கிறார்கள் அவ்வாறு வெடி வைக்கும் பொழுது மேலூர் கிராமம் முழுவதும் ஒரு வித நாற்றம் வருகிறது. அதை என்னவென்று சொல்வது என்று எனக்கு தெரியவில்லை.அந்த நாற்றம் அதிகமாக வருகின்றது. அதை நீங்கள் மாசு கட்டுப்பாட்டு வாரியம் அதனை சரி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இன்னொன்று என்னவென்றால் இந்த கிரஷரில் இருந்து வரும் தூசுகள் மேலூர் கிராமத்தை நோக்கி, அந்த காற்று வட திசையில் வீசும் பொழுது மேலூர் கிராமமே ஒரே தூசு மயமாக ஆகிறது. அதை யாரும் கண்டு கொள்ளவில்லை. மாசு கட்டுப்பாடு வாரியம் என்ன செய்கிறார்கள் என்பது எதுவும் தெரியவில்லை என்று கூறினார். அந்த பகுதியில் வாகனத்தில் செல்ல வேண்டும் என்றால் அந்த தூசியில் மூக்கினை மூடிக்கொண்டு போக வேண்டும் இல்லை என்றால் நாங்கள் எங்கேயாவது விழுந்து தான் எழுந்து செல்ல வேண்டும் என்றார். அதனை நான் ஒரு பெரிய குறையாக சொல்கின்றேன். மேலூர் கிராமத்திற்கு ஒரு பெரிய பிரச்சனை இரண்டாவதாக அந்த தார் பிளாண்ட். இந்த தார் பிளாண்ட் இயங்கும் பொழுது ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு மேல் அந்த புகை அதை நாம் ஒன்றும் செய்ய முடியாது. இதனை ஒரு வாரம் இரண்டு நாள் மூன்று நாள் விட்டோம் என்றால் அந்த புகையினுடைய தாக்கம் அதிகமாக இருப்பதாக தெரிவித்தார். ஏனென்றால் சின்ன குழந்தைகள் நிறைய பேர் இருக்கிறார்கள். மேலூர் கிராமத்தில் அவர்கள் 200 பேர் இருப்பதாக கணக்கு கொடுத்து இருக்கிறார்கள். மேலூர் கிராமத்தில் ஆயிரம் பேர் வசிக்கிறார்கள் முதலில் இந்த கிராமத்தினுடைய கணக்கே தவறு என்று சுட்டிக்

காட்டினார். மக்கள் தொகை கணக்கு என்று ஒன்றினை காட்டினர், அதில் மேலூர் கிராமத்தில் 250 பேர் தான் காண்பித்திருக்கிறார்கள். அதனால் இதை கொஞ்சம் வழிமுறைப்படுத்தி கல்குவாரி கொடுப்பதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை, இருந்தாலும் இது போன்ற வேலைகளை முறையாக செய்து கொடுக்குமாறு வேண்டுகோள் விடுத்து தனது கருத்தினை பதிவு செய்தார்.

2. திரு. காமராஜ், மேலூர்

என்னுடைய பெயர் காமராஜ், மேலூர் இப்பொழுது இந்த கல்குவாரி நடத்துவதற்கு எனக்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை. இதனால் மக்களுக்கு வேலை வாய்ப்பு உருவாகிறது, படிக்காதவர்கள் வேலை பார்க்கின்றார்கள், வெளியூர் சென்று சிங்கப்பூர் சென்று இரண்டு லட்சம், மூன்று லட்சம் பணம் கட்டி சம்பாதிப்பதை விட இது போன்ற கல்குவாரிக்கு வந்து படிக்காதவர்கள் நிறைய பேருக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கி தருகிறார்கள். அதனால் இதற்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்து தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

3. திருமதி. தங்கம், மாவட்ட பொறுப்பாளர், புதுக்கோட்டை மாவட்ட விவசாய சங்கம்,

என் பெயர் தங்கம் மாவட்ட பொறுப்பாளராக விவசாய சங்கத்தில் இருக்கின்றேன். இலுப்பூர் கோட்டாட்சியர் ஐயா அவர்களை ஊர் சார்பாக வரவேற்கின்றேன், தாசில்தார் அவர்களையும் ஊர் சார்பாக வரவேற்கின்றேன். இந்த கல்குவாரியினை பற்றி எந்த எதிர்ப்பும் தெரிவிக்க விரும்பவில்லை, இதற்கு உறுதுணையாக நாங்கள் எந்த எதிர்ப்பும் சொல்லவில்லை. பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

4. திரு. அருண், புதுக்கோட்டை

எனது பெயர் அருண். புதுக்கோட்டை இந்த கிராமத்தில் இந்த கல்குவாரி செயல்பட்டால் சுற்றி இருக்கின்ற அனைத்து இளைஞர்கள் மற்றும் இருக்கின்ற அனைவருக்கும் ஒரு நல்ல வேலை வாய்ப்பு கிடைக்கும். அதனால் இதை நடத்துவதற்கு எனக்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை. நீங்கள் தாராளமாக பரிந்துரைகள் பண்ணலாம் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

5. திரு. சுப்பிரமணியன், மேலூர்

என் பெயர் சுப்பிரமணியன், மேலூர். இந்த கல்குவாரி அனுமதி கொடுப்பதற்கு எனக்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை. இந்த பஞ்சாயத்திற்கு நல்ல வருமானம்

வரும், மக்களுக்கு நல்ல உழைப்பு இருக்கின்றது. அதனால் இந்த கல்குாரிக்கு தாராளமாக அனுமதி கொடுக்கலாம் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

6. திரு. பாண்டியன் மேலூர்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நடத்தும் பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர், வருவாய்த்துறை, பத்திரிக்கையாளர் மேலூர் கிராம பொதுமக்கள் அனைவரையும் மேலூர் கிராம ஊராட்சி சார்பாக அனைவரையும் வரவேற்கிறோம். மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவரிடம் தங்களது பெயர் மற்றும் ஊர் கேட்டதற்கு பாண்டியன் மேலூர் என பதில் அளித்தார். இந்த கல்குவாரி தொழிலானது ஒரு தொழில் வளரும் பொழுது கிராம ஊராட்சி கண்டிப்பாக வளர்ச்சி பெறும். அதனால், இந்த தொழிலானது அரசு சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு அனுமதி கொடுக்க வேண்டும் என்றார். அண்ணன் சொன்னதை போன்று இந்த கல்குவாரியில் கல் உடைப்பதற்கு என்ன வெடி வைக்க வேண்டுமோ அதற்கு தகுந்த வெடியை வைத்து மக்களுக்கும், ஊருக்கும் எந்த பிரச்சனையும் வராதவாறு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அரசு சட்ட திட்டங்களோடு அனுமதி வழங்குமாறு அன்போடு கேட்டுக்கொண்டு தனது ஆதரவு கருத்தினை தெரிவித்தார்.

7. திரு. எம்.சி. மனோகரன், மேலூர்

என்னுடைய பெயர் எம். சி. மனோகரன். மேலூர் ஊராட்சி மன்ற பொறுப்பிலும், சமூக ஆர்வலர் மற்றும் ஆதாம் பிட்ச்சா பணியிலே சேர்ந்து செயல்பட்டு கொண்டிருக்கின்றேன். இந்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு பொதுமக்கள் கருத்து கேட்டு கூட்டத்திற்கு வருகை தந்திருக்கின்ற உயர்திரு கோட்டாட்சியர், உயர்திரு வட்டாட்சியர், மாசு கட்டுப்பாடு அதிகாரி மற்றும் வருகை புரிந்திருக்கின்ற ஏனைய அனைத்து அலுவலர்களுக்கும் ஊர் பொதுமக்களுக்கும் அன்போடு காலை வணக்கத்தை தெரிவித்து கொண்டார். நான் பல கருத்து கேட்பு கூட்டத்தில் பேசியிருக்கின்றேன். ஒரு கவிஞர் என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில் ஏன் கை ஏந்த வேண்டும் வெளிநாட்டில் என்று சொல்லி இருக்கின்றார். எல்லா வளமும் நலமும் இன்றைய தினம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஆக இருக்கின்ற எங்களுடைய அன்பு தலைவர் தளபதியார் அவர்களின் ஆட்சியிலே மிக சீரும் சிறப்புமாக நடந்து கொண்டிருக்கின்றது. அந்த வகையிலே இந்த மேலூர் பஞ்சாயத்தில், புதுக்கோட்டை மாவட்டத்தில் வளர்ச்சியான கிராமமாக இருந்து கொண்டிருக்கின்றது. அதாவது

சொல்ல வேண்டுமென்றால் அனைத்து நிதிகளும் இங்கு உருவாகிக் கொண்டிருக்கின்றது. வளர்ச்சி பணிகள் நடந்து கொண்டிருக்கின்றது. இதை நான் பல முறை கூறி இருக்கின்றேன். அதே போன்று இந்த அரங்கத்தில் முன்னாள் மாவட்ட ஆட்சியர் திருமதி. உமா மகேஸ்வரி அவர்களும், அதேபோன்று எங்கள் நெஞ்சமோடு இருந்த முன்னாள் மாவட்ட ஆட்சியர் திருமதி. கவிதா ராமு அவர்களும் வருகை புரிந்து இங்கு கருத்து கேட்பு கூட்டம் நடத்தி இருக்கின்றார்கள். அதே போன்று முன்னாள் கோட்டாட்சியர் அன்பிற்கினிய திரு.பழனிச்சாமி ஐயா அவர்களும் வருகை புரிந்து இருக்கிறார்கள். நான் சொல்லத் தேவையில்லை. என்னுடைய கிராமம் வளர்ச்சி அடைய வேண்டும் என்று சொன்னால், என்னுடைய ஊர் வளர வேண்டும் என்று சொன்னால், எங்களுக்கு தேவையானவற்றை நாங்களே பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்றார். அரசு தான் செய்ய வேண்டும் என்று இல்லை. நாங்களே அதை செய்ய வேண்டும். அந்த வகையில் இந்த கல்குவாரி உடைப்பதற்கு எங்களுக்கு எந்த எதிர்ப்பும் கிடையாது. அவர்கள் சொன்னது போன்று போன்று சட்டதிட்டத்துக்கு உட்பட்டு பொதுமக்களுக்கும் பாதிக்காத வகையில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இதற்கு முன்னாள் கருத்து கேட்பு கூட்டத்தில் மனு கொடுத்து இருக்கிறேன். இந்த கிரஷர் எம்-சாண்ட் மண் கொண்டு செல்லும் சாலை முழுவதும் மண் சிதறி பயணிகளின் கண்ணில் மண் விழுகிறது என்று கூறி இருக்கிறேன். அதை உதவி இயக்குநர், கனிமம் அவர்களிடம் கூறி இருக்கிறேன். அதை நாங்கள் அப்புறப்படுத்துகின்றோம் என்று கூறுகிறார்கள். ஆனால் அந்த மண்ணை பாருங்கள் நீங்கள் அதிகாரியாக சென்று பாருங்கள். என்னை போன்று நடந்து சென்றால் தான், உங்களுக்கு தெரியும். நீங்கள் கார் ஜீப் போன்ற வாகனத்தில் சென்றால் உங்களுக்கு தெரியாது. அந்த மேலூரில் இருந்து முத்துடையான்பட்டி, தாவுதுமில் வரை சென்று பாருங்கள் அவ்வளவு மண் பக்கவாட்டுகளில் இருப்பதாக தெரிவித்தார். இப்பொழுது தான் சமீபத்தில் நேற்றைக்கு முந்தைய தினம் தான் அதை அப்புறபடுத்தி இருப்பதாக தெரிவித்தார். இதனால் குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள், பொதுமக்கள் பாதிக்கப் படுகிறார்கள், பள்ளிக்கு செல்லும் குழந்தைகள் அனைவரும் பாதிக்கப் படுகிறார்கள். இந்த எம்-சாண்ட் கிரசரில் இருந்து கொண்டு போகட்டும் வேண்டாம் என கூறவில்லை. வேலை வாய்ப்பு வேண்டும் தான், இல்லை என்று கூறவில்லை. ஆனால் நடைமுறையில் பொதுமக்கள் பாதிக்காதவாறு செயல்பட வேண்டும். இது சம்பந்தமாக மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு மனு கொடுத்திருக்கின்றேன். இன்று வரையும் நடவடிக்கை எடுக்கவில்லை. இது மிகவும் கண்டிக்கத்தக்க விஷயமானது. தயவு செய்து பொது மக்களுடைய கோரிக்கைகளை எங்களுடைய அன்பு தளபதி எங்களுடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் பார்த்துக் கொண்டிருக்கிறார். தினசரி

நீங்கள் பார்க்கிறீர்கள். அதனால் பொது மக்களை பாதிக்காத வகையில் இந்த எம்-சாண்ட் மணலை கொண்டு வர சொல்ல வேண்டும். தண்ணீர் அதிலிருந்து ஊற்றுகிறது நீங்கள் எல்லாம் காரில் செல்கிறீர்கள், அந்த தண்ணீர் தெறிக்கும் பொழுது அடுத்தவருடைய அணிந்துள்ள துணிகளில் பட்டு நாற்றம் வருகிறது. நான் தினமும் பார்த்து நான்கு, ஐந்து முறை நிறுத்தி மறித்து கூறி இருக்கிறேன். இதுபோன்று கொண்டு செல்லாதீர்கள். பொதுமக்களுடைய இன்னலுக்கு ஆளாகாதீர்கள் என்று கூறி இருப்பதாக தெரிவித்தார். அவர்கள் கொண்டு செல்லட்டும் ஆனால், அந்த தண்ணீரை அங்கேயே வடிகட்டி நல்ல மணலை மூடி பொதுமக்கள் பாதிக்காதவாறு கொண்டு செல்லட்டும். எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையில்லை எங்களுடைய கிராமம் வளர்ச்சி அடைய வேண்டும் எங்கள் ஊர் முன்னேற வேண்டும் என்று சொல்லி இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி தனது ஆதரவு கருத்தினை தெரிவித்தார்

8. திரு. K. ஜெகபர் அலி, வெங்களூர், புதுக்கோட்டை

அனைவருக்கும் பணிவான காலை வணக்கம் என் பெயர் கே. ஜெகபர் அலி புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் ஒன்றியம் வெங்களூர் கிராமத்தைச் சேர்ந்தவன். எனக்கு வயது 60 ஆகிறது. இதுவரை நான் கருத்து கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டதில்லை. முதன் முதலாக இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கின்றேன். இங்கு வருகை தந்திருக்கும் மரியாதைக்குரிய நேர்மையான அதிகாரி கோட்டாட்சியர் அவர்களே, மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் அவர்களே, வட்டாட்சியர் அவர்களே, மற்ற அலுவலர்களே, பத்திரிக்கை நிருபர்களே, நண்பர்களே, தோழர்களே உங்கள் அனைவருக்கும் எனது பணிவான காலை வணக்கத்தை பகிர்ந்து கொள்கிறேன். இந்த கிராமத்தில் மரியாதைக்குரிய அண்ணன் நல்லையா அவர்கள் கல் உடைக்கும் தொழில் செய்வதற்கு அனுமதி கேட்டு தற்பொழுது அதற்காக கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தக் கருத்து கேட்பு கூட்டத்தில் அனைவரும் இந்த கல்குவாரி நடத்தலாம் என்று கூறி கொண்டிருக்கிறார்கள். நானும் இந்த கல்குவாரி நடத்த வேண்டும் என்று கூற தான் வந்திருக்கிறேனே தவிர கல்குவாரி வேண்டாம் என்று சொல்வதற்கு நான் ஒருபோதும் வரவில்லை. அதேசமயம் இந்த கல்குவாரி அரசின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு உரிய நடைமுறையின் படி நடத்தப்பட வேண்டும் என்ற கருத்தை மட்டும் நான் வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணமாக நான் நீண்ட நேரம் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. எனக்கு பிறகு அன்பு சகோதரர் மணிகண்டன் நிறைய நிறை குறைகளை சுட்டிக்காட்டி பேச இருக்கிறார். ஒரே ஒரு சின்ன உதாரணம் அதாவது ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் ஒரே ஒரு விஷயத்தை

மட்டும் சொல்லி அமர கடமைப்பட்டிருக்கிறேன். இந்த கல்குவாரிக்கு மரியாதைக்குரிய கிராம நிர்வாக அலுவலர், சத்தியமங்கலம் வட்டம், குளத்தூர் வட்டம் அவர்கள் சான்று கொடுத்து இருக்கிறார்கள். அது உங்களுடைய உத்தேசிக்கப்பட்ட சுரங்க திட்டத்தில் இருக்கிறதென நினைக்கிறேன். நீங்கள் பார்த்தால் நன்றாக இருக்கும்னு நினைக்கிறேன். பக்கம் எண் 312 -ல் உள்ள சான்று என்று குறிப்பிட்டுள்ளார். புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், சத்தியமங்கலம், கிராம நிர்வாக அலுவலர் அளிக்கும் சான்று. புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டம் கதவு எண் 8668/4, சோழா ரியல் எஸ்டேட் திருவப்பூர், புதுக்கோட்டை என்ற முகவரியில் வசிக்கும் திரு. மாரி கோனார் அவருடைய மகன் திரு நல்லையா என்பவர் புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், மேலூர் கிராமம், சர்வே எண் 210/7C1, 210/8A1B பட்டா நிலத்தில் மொத்த பரப்பு 1.53 ஹெக்டேர் பரப்பளவில் கருங்கல், சக்கை கல் வெட்டி எடுக்க கல்குவாரி குத்தகைக்கு அனுமதி கோரியுள்ளார். மேற்கண்ட கல்குவாரி குத்தகை அனுமதி கோரியுள்ள இடத்தை சுற்றி சுமார் 500 மீட்டர் சுற்றளவில் கிராம நத்த குடியிருப்பு பகுதிகள், அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனைகள், கோவில்கள், புராதான வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் மின் மயானங்கள் எதுவும் இல்லை. கல்குவாரி அனுமதி கோரி விண்ணப்பித்துள்ள புலத்திற்கு வண்டிகள் சென்று வர கிராம சாலைகளுக்கு இடையூறு எதுவும் இல்லை. மேலும், பொது மக்களுக்கும் அருகில் உள்ள அரசு புறம்போக்கு மற்றும் பட்டாதாரருக்கும் எவ்வித இடையூறும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன் என்று ஒரு சான்று கொடுத்து இருக்கிறார். நான் என்ன சொல்கிறேன் என்றால் நாங்கள் கூகுள் மேப்பில், கூகுள் எர்த்ல பார்க்கும் பொழுது அங்கு காலனி இருக்கிறது, குடியிருப்புகள் எல்லாம் நிறைய இருக்கிறது. எங்களுக்கு நன்றாக தெரிகிறது. அதனால் தயவு செய்து அதிகாரிகள் மீண்டும் ஒரு முறை வந்து நேரடியாக ஆய்வு செய்ய வேண்டும். ஏனென்றால் நான் அதெல்லாம் இருக்கிறதென்று சொல்லிவிட்டு கிராம நிர்வாக அலுவலர் கொடுத்திருக்கிற சான்றை இல்லை என சொல்லி நீங்கள் அனுமதி கொடுத்துவிட்டால் அந்த இடத்தில் தான் தவறு நடக்க ஆரம்பிக்கும். அந்த இடத்தில் தான் குழப்பம் வர ஆரம்பிக்கும். நேர்மையான அதிகாரிகள் ஆகிய தாங்கள் மீண்டும் ஒரு முறை அதை நேரடியாக பார்த்து அதுபோன்று இருந்தால் அதற்கு என்ன வழிமுறை என்பதை முடிவு செய்துவிட்டு அது போன்று செய்தால் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. ஆகவே தயவு செய்து இங்கு இந்த கருத்தை கேட்பு கூட்டத்தை தலைமை பொறுப்பை ஏற்று நடத்திக் கொண்டிருக்கும் மரியாதைக்குரிய ஐயா கோட்டாச்சியர், மாசு கட்டுப்பாடு பொறியாளர், வட்டாட்சியர் அவர்கள் தயவு செய்து என்னுடைய இந்த வேண்டுகோளை மட்டும் ஏற்று தயவுசெய்து மீண்டும் ஒரு

முறை நேரில் பார்த்துவிட்டு இவை எல்லாம் இல்லை என்றால் நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தி கேட்டு கொள்கிறேன். இது போன்ற தவறோடு தாங்கள் அனுமதி கொடுக்கும் பட்சத்தில் அதற்கு அடுத்து நாங்கள் மாவட்ட ஆட்சியரை பார்க்கிறதோ, சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையை நாடுவதோ போன்ற செயல்களை செய்ய நேரிடும். நாங்கள் அதற்கு செல்ல விருப்பம் இல்லை. சட்டப்படி சட்டத்திற்கு உட்பட்டு இந்த கல்குவாரியை நீங்கள் தாராளமாள அனுமதி கொடுக்கலாம். சட்டத்தை மீறி தாங்கள் செய்யும் பட்சத்தில் நாங்களும் மேல்முறையீடு செல்வோம். அப்பீல் போவோம் உயர்நீதிமன்ற மதுரை கிளையை அணுகுவோம், என்பதை பணிவோடு தெரிவித்துக் கொண்டு கொடுத்த வாய்ப்புக்கு நன்றி கூறி தனது கருத்தை பதிவு செய்தார்.

<u>9. திரு. மணிகண்டன், காமராஜபுரம், புதுக்கோட்டை</u>

எனது பெயர் மணிகண்டன், காமராஜபுரம், புதுக்கோட்டை. எனது கைபேசி எண் 9965119111. புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டம் மேலூர் கிராமம் புல எண்கள் 210/7C1, 210/8A1B ஆகியவற்றில் 1.53.5 ஹெக்டேர் சுமார் மூன்றரை ஏக்கர் அளவிற்குள்ள எம் நல்லையா கல்குவாரி கருத்து கேட்பு கூட்டத்தில் தனது கருத்துக்களை பதிவு செய்ய வந்திருப்பதாக தெரிவித்தார். அதற்கு முன்பு ஒரு கருத்தினை பொதுவாக சொல்ல வருகின்றேன். என்னவென்றால் ஒரு சட்டம் என்பது உருவாக்கப்படுகிறது, விதி என்பது உருவாக்கப்படுகிறது. இன்றைக்கு இந்த கருத்து கேட்பு கூட்டம் நடக்கிறது என்றால் உச்ச நீதிமன்றம் உத்தரவு கொடுத்து இருக்கிறது பல்வேறு முறைகேடுகள் நடந்த பின்பு தான் உச்ச நீதிமன்றத்திற்கு சென்று சமூக ஆர்வலர்கள் அணுகும் பொழுது உச்ச நீதிமன்றம் இது போன்று ஒரு நடைமுறையை நாடு முழுவதும் கொண்டு வருவதற்கு உத்தரவிட்டது. அந்த உத்தரவுக்கு பின்பு ஒரு விதி அமல்படுத்தப்பட்டது. அப்பொழுது அந்த விதி என்றால் அமல்படுத்துவதற்காக தான். அதனால் தான் அமல்படுத்தப்பட்டு இந்த கூட்டம் நடக்கிறது. அதுபோன்று சட்ட விதிகளை பின்பற்றி இங்கு அனுமதிகளை கொடுப்பதற்கு யாரும் தடை சொல்வதற்காக இங்கு வரவில்லை. சட்ட விதிகளின்படி இல்லாத விஷயங்களை மட்டும் தான் நாங்கள் இங்கு சுட்டி காட்டுகின்றோம். அதை சரி செய்து இங்கு இந்த கல்குவாரிகள் இயங்குவதற்கு யாரும் தடை சொல்ல முடியாது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்வதாக கூறினார். ஓடை மற்றும் வாய்க்கால் நீர்வழி பாதைகளாக இருந்தால் அதில் இருந்து கல்குவாரிக்கு 50 மீட்டர் சுமார் 175 அடி இடைவெளி விட வேண்டும் என்று சிறு கனிம சலுகை விதிகள் 1959 சட்டம் கூறுகிறது. இதில் இந்த மேலூர் நல்லையா கல்குவாரி அமையும் புல எண் 210/8A1B புலத்திற்கு வடபுறமாக

ஓடை செல்கிறது. இதற்கு 50 மீட்டர் இடைவெளி இல்லாமல் உள்ளது. இந்த ஓடை சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் உள்ள கிராம வரைபடத்தில் குறிப்பிட்டு காட்டப்பட்டிருக்கிறது. அடுத்து பார்த்தீர்கள் என்றால் 210/7C1 புலத்திற்கு வடக்கு புறமாக ஓடை செல்கிறது. இதற்கு 50 மீட்டர் இடைவெளி இல்லாமல் இருக்கிறது. இந்த ஓடை சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் உள்ள வரைபடத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதே நல்லையா கல்குவாரி அமையும் இந்த புல எண் 210/7C1 புலத்திற்கு தென்புறமாக பனம்பட்டியினுடைய புல எண் 56 ஐ ஒட்டி ஓடை செல்கிறது. இதற்கு 50 மீட்டர் இடைவெளி இல்லாமல் இருக்கிறது. இதுவும் இந்த அறிக்கையில் இருக்கின்ற கிராம வரைபடத்தில் குறிப்பிட்டு காட்டப்பட்டிருக்கிறது. ஓடை போன்ற நீர்நிலைகளில் இருந்து கல்குவாரி புலத்திற்கு சிறு கனிம சலுகை விதிகள் 1959 சட்டம் 36 (1)-வது பிரிவின் படி 50 மீட்டர் இடைவெளி விட வேண்டும். ஆனால் அவ்வாறு இல்லாமல் இருக்கிறது. இது சட்ட விதி மீறல். அது மட்டும் இல்லாமல் சென்னை உதவி ஆணையர் நில நிர்வாகம் அவர்கள் தனியார் பட்டா நிலத்தில் பாதை இருந்தாலும் அது நிலவியல் பாதை, பூஸ்தி பாதை மற்றும் ஓடை ஆகியவற்றை வருவாய் துறை நிலை ஆணை 26 பிரிவு 15 பற்றிய அரசாணையில் ஓடை மற்றும் பாதை அரசினுடையது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியார் சொத்தில் இருந்தாலும் அது அரசினுடைய சொத்து என தெளிவாக வரையறுத்துள்ளது. அந்த ஆணையினுடைய நகலை இதனுடன் இணைத்து தருகிறோம். ஓடைக்கு இடைவெளி விடாமல் இந்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயார் செய்யப்பட்டிருப்பது தவறு, அதுவே விதிமீறல். முதலில் அதனால் அதற்கு சட்டப்படி அனுமதி தர முடியாது. அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், வீட்டு மனைகள், நிரந்தர கட்டுமானங்கள் இவையெல்லாம் சிறு கனிம சலுகை விதிகள் 1959 பிரிவு 36 (1)- இன் அடிப்படையில் வருவாய்த்துறை ஆவணங்களில் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், ஊராட்சி மற்றும் DTCP அங்கீகரிக்கப்பட்ட மனைகள், ஊர் நத்தம், கோவில் இது மாதிரியான நிரந்தர கட்டுமானங்கள், அரசின் தொகுப்பு வீடுகள், பசுமை வீடுகள், வங்கி கடன் பெற்று கட்டப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் இவை எல்லாம் இருந்தால் 300 மீட்டர் இடைவெளி விட வேண்டும், இடைவெளி விட்டு தான் கல்குவாரி பணி செய்ய வேண்டுமென தெளிவாக இந்த விதி குறிப்பிடுகிறது. ஆனால் மேலூர் கிராமத்தில் இந்த கல்குவாரி புலத்தைச் சுற்றி 300 மீட்டர் சுற்றளவில் அவர்களே வரைபடத்தில் சொல்லி இருக்கிறார்கள், தெளிவாக காண்பித்து இருக்கிறார்கள் இந்த 300 மீட்டர் வரைபடம், 500 மீட்டர் வரைபடம் அதற்குள் எல்லாம் வருகிறது. அதன் தெற்கு பகுதியில் பனம்பட்டி கிராமத்தில் புல எண் 56 -ல் அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் உள்ளன, இது சுற்றுச்சூழல்

தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் உள்ள கிராம வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. மேலூர் கிராமத்தில் கல்குவாரி புலத்தை சுற்றி 300 மீட்டர் சுற்றளவில் 150 மீட்டருக்குள் கிழக்குப் பகுதியில் பனம்பட்டி கிராமத்தில் நிரந்தர கட்டுமானங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் உள்ளன. இது சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆங்கில அறிக்கையில் 305 ஆவது பக்கம் பிளேட் நம்பர் 6 -ல் உள்ள வரைபடத்தில் குறிப்பிட்டு காட்டப்பட்டு இருக்கிறது. எனவே, இந்த கல்குவாரி சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது. அந்த வரைபடத்தில் பார்த்தீர்கள் என்றால் அரசு காலி வீடுகள் இருப்பதினை மறைத்து ஒரு இன்ஃப்ராஸ்ட்ரக்சர் என்கிற ஒரு வார்த்தையை மட்டும் பயன்படுத்தி இருக்கிறார்கள் அது ஒரு மிகப்பெரிய முறைகேடு. அதில் பார்த்தீர்கள் என்றால் வருவாய்த்துறை ஆவணங்களில் குறிப்பிட்டு காட்டப்படும் வீடுகளில் யாரும் குடியிருக்க வில்லை, வீடு இப்பொழுது இடிந்து விட்டது, வீடு இப்பொழுது சேதாரம் அடைந்துவிட்டது என்றெல்லாம் கூறி அதிகாரிகளே கிராம நிர்வாக அதிகாரிகள் முதற்கொண்டு பலகட்ட அதிகாரிகளும் அதை மறைத்துள்ளதாக குறிப்பிட்டார். ஆனால், சிறு கனிம சலுகை விதிகள் 1959 சட்டப்படி UDR வருவாய் துறை ஆவணங்களில் குறிப்பிட்டு இருந்தாலே போதும், வீடு என்று சுட்டி காண்பித்து இருந்தாலே போதும், அங்கு வீடு இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை, எப்பொழுது வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் அங்கு வீடு வாங்கலாம் கட்டலாம் அதை தான் அந்த விதி குறிப்பிடுவதாக தெரிவித்தார். எனவே, சிதிலமடைந்திருந்தாலும், இடிந்து சேதாரம் அடைந்திருந்தாலும் அது வீடு அல்லது வீட்டு மனை தான் என்று தெளிவாக குறிப்பிட்டுள்ளது. அந்த ஆணையின் நகலும் இதில் இணைத்து உள்ளோம் என்று தெரிவித்தார். கல்குவாரி அமைந்துள்ள புலத்திலிருந்து 300 மீட்டர் தூரத்திற்குள் வீடுகள் எதுவும் இருக்கக்கூடாது என்ற சட்டம் இருக்கின்ற நிலையில் அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், நிரந்தர கட்டுமானங்கள், பள்ளி எல்லாம் இருக்கிறது. எனவே இந்த கல்குவாரி சட்டப்படி இயங்குவதற்கான வாய்ப்பு இல்லை. இது தவிர கல்குவாரி அமையும் புலத்தை சுற்றி 300 மீட்டர் சுற்றளவிற்கு பல நிரந்தர தற்காலிக வீடுகள் உள்ளன. கல்குவாரியில் வெடி வைக்கும் பொழுது 300 மீட்டர் சுற்றளவிற்கு வீடுகள் இருக்கக்கூடாது என்று அரசு விதி சொல்கிறது. அதையும் மீறி சட்டவிரோத அனுமதி கொடுத்தால் 2024 மே 1-ஆம் தேதி விருதுநகர் மாவட்டம், ஆவியூர் கிராமத்தில் நடந்த வெடி சம்பவத்தில் உயிர்ப்பலி ஏற்பட்டது போன்ற சம்பவங்கள் இங்கு நடப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே, இதற்கு அனுமதி தருவது சட்டத்திற்கு புறம்பானது. சட்டத்திற்கு புறம்பாக தான் அனுமதி தர முடியும் என்று தெரிவித்தார். பல்வேறு Google படங்களை நாங்கள் எடுத்து வைத்திருக்கிறோம், அதில் 187 மீட்டரில் ஒரு வீடு இருக்கிறது, 24 மீட்டர்

தொலைவில் ஒரு வீடு இருக்கிறது, 181 மீட்டரில் ஒரு வீடு இருக்கிறது, 272 மீட்டர் தொலைவில் ஒரு வீடு இருக்கிறது, 24.79 மீட்டரில் ஒரு வீடு இருக்கிறது, 305 மீட்டரில் இருக்கிறது, 18 மீட்டரில் இருக்கிறது, 70 மீட்டரில் ஒரு வீடு இருக்கிறது, 146 மீட்டரில் ஒரு வீடு இருக்கிறது. எனவே, இவ்வளவு வீடுகள் இங்கு இருக்கிறது. இவற்றையெல்லாம் மறைத்து விட்டு தான் கிராம நிர்வாக அலுவலர் இந்த தடையின்மை சான்று வழங்கியிருக்கிறார் என சுட்டிகாட்டினார். அடுத்ததாக நீர்நிலைகள் ஊரணி, ஏரி, மற்றும் குளம் இவையெல்லாம் தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்கள். இவையெல்லாம் இருந்தால் 500 மீட்டர் ஏறத்தாழ 1750 அடி இடைவெளி விட வேண்டும் என பல்வேறு நீதிமன்ற தீர்ப்புகள் இருக்கிறது, விதியும் இருக்கிறது. அவ்வாறான நீர்நிலைகளுக்கு பல்வேறு துறைகளில் அனுமதி வாங்க வேண்டும். இவ்வாறு நீர்நிலை இருந்திருந்தால் பல்வேறு துறைகளில் அனுமதி பெற்று விட்டு அவங்களிடம் தடையின்மை சான்று எல்லாம் பெற்று அதன் பின்பு தான் நீங்கள் விண்ணப்பிக்கவே முடியும். அவ்வாறு அனுமதி எதுவும் வாங்கப்படவில்லை. எந்த சிறப்பு அனுமதியும் வாங்கவில்லை. கல்குவாரிக்கு அனுமதி கேட்பதற்கு முன்னர் இந்த அனுமதி எல்லாம் வாங்கிவிட்டு தான் கேட்க வேண்டும். இவை எதுவும் அனுமதி வாங்காமல் இவர்கள் அறிக்கை தயார் செய்துள்ளனர். மேலூரில் கல்குவாரி அமையும் புல எண்: 210 புலத்தின் மேற்கு புறத்தில் 200 -வது மீட்டரில், பனம்பட்டி கிராமத்தில் புல எண் 58 -ல் வால் ஊரணி உள்ளது. இந்த ஊரணி கிராம வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. கணினி புல வரைபடத்திலும் காட்டப்பட்டுள்ளது. மேலூர் கல்குவாரி அமையும் புல எண்: 210 புலத்தின் கிழக்கு புறத்தில் 500 மீட்டர் சுற்றளவிற்குள், பனம்பட்டி கிராமத்தில் புல எண்: 166 -ல் 20 ஏக்கர் பரப்பளவு உள்ள வாகைகுளம் மிகப்பெரிய குளம் (VAKAI KULAM) உள்ளது. இந்த குளம் கிராம வரைபடத்தில் காட்டப்பட்டு உள்ளது. கணினி புல வரைபடத்தில் கட்டப்பட்டுள்ளது ஊரணி, ஏரி குளங்களில் இருந்து கல்குவாரி புலத்திற்கு, பல்வேறு நீதிமன்ற உத்தரவுபடி, சட்டப்படி 500 மீட்டர் (1750 அடி) இடைவெளி விட வேண்டும். அவ்வாறு கல்குவாரி இயங்குவதாக இருந்தால் பல்வேறு துறையிடம் சிறப்பு அனுமதி பெற வேண்டும். அதை அவர்கள் விண்ணப்பித்து பெற வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்யவில்லை செய்யமுடியவில்லை. அதனால் இந்த கல்குவாரி சட்டப்படி அனுமதி அளிக்க வாய்ப்பில்லை. அனுமதி தரக் கூடாது. எனவே, ஊரணி, குளம், ஏரிக்கு இடைவெளி விடாததால் கல்குவாரிக்கு சட்டப்படி, அனுமதி தர முடியாது. மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, நீர் வழங்கும் அமைப்பு, அரசு ஆழ்குழாய் கிணறு, நீரேற்றும் நிலையம், போர்வெல் போன்றவை இருந்தால், 500 மீட்டர் இடைவெளி விட வேண்டும் என சிறு கனிம சலுகை விதிகள் 1959 சட்டம் கூறுகிறது. இந்த கல்குவாரி அமையும்

புலத்திற்கு 500 மீட்டர் சுற்றளவில், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, நீர் வழங்கும் அமைப்பு, அரசு ஆழ்குழாய் கிணறு, நீரேற்றும் நிலையம், போர்வெல் போன்றவை உள்ளது. எனவே இதற்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது. மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இது போன்ற அமைப்புகள் எல்லாம் இருந்து கல்குவாரி புலத்திற்கு, சிறு கனிம சலுகை விதிகள் 1959 சட்டம் பிரிவு, 36(1) -ன் 500 மீட்டர் இடைவெளி விட வேண்டும். ஆனால் சுரங்கத் திட்டத்தில் இவை இருப்பது காட்டாமல் தயாரித்து இருப்பது சட்டப்படி விதிமீறல் ஆகும். எனவே, அனுமதி வழங்கக் கூடாது. வண்டிப்பாதை மற்றும் நடைபாதை இருந்தால், 10 மீட்டர் (35 அடி) இடைவெளி விட வேண்டும் என சட்டம் சொல்கிறது. செயற்கையாக போடப்பட்ட தார் சாலையாக, பொதுச் சாலையாக (PUBLIC ROAD) ஆக இருந்தால் 50 மீட்டர் (175 அடி) இடைவெளி விட வேண்டும் என சிறு கனிம சலுகை விதிகள் 1959 சட்டம் கூறுகிறது. இந்த புலத்தின் தெற்கு பகுதியில் தார் சாலை செல்கிறது. தார் சாலையான பொதுச்சாலைக்கு 50 மீட்டருக்கு பதில் 7 மீட்டர் (20 அடி) மட்டுமே இடைவெளி விடப்பட்டு உள்ளதாக இந்த அறிக்கையில் சொல்கிறார்கள். விதி 50 மீட்டர் என்ற சொல்கிறது. ஆனால், அவர்கள் 7 மீட்டர் தான் இடைவெளி விட்டு இருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள். இந்தப் பொதுச்சாலை கிராம வரைபடம் மற்றும் புல வரைபடங்களில் காட்டப்பட்டுள்ளது. மேலூர் கல்குவாரி அமையும் புல எண்: 210/7C1 புலத்தின் மேற்கு பகுதியில் தார் சாலை செல்கிறது. அந்த தார் சாலையும் பொது சாலை தான். அந்த தார் சாலையான பொதுச்சாலைக்கு 50 மீட்டருக்கு பதில் 8 மீட்டர் (25 அடி) இடைவெளி மட்டுமே விடப்பட்டு உள்ளது. இந்த செயற்கையாக போடப்பட்டுள்ள பொதுச்சாலை கிராம வரைபடம் மற்றும் புல வரைபடங்களில் காட்டப்பட்டுள்ளது. மேலும் செயற்கையாக போடப்பட்டு உள்ள பொதுச்சாலையான (PUBLIC ROAD) இதை, வண்டிப்பாதை என காட்டி 10 மீட்டர் மட்டுமே இடைவெளி விடப்படும் என சுரங்கத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தவறானதாகும். செயற்கையாக போடப்பட்ட தார்சாலை பொதுச் சாலை என்று தான் விதி எல்லாம் சொல்கிறது. அப்படி இருக்கும் பொழுது அதை எப்படி வண்டி பாதை என்று குறிப்பிட்டு இவர்கள் மாற்றி 10 மீட்டர் மட்டுமே இடைவெளி விட்டு இருக்கிறார்கள். அந்த பத்து மீட்டர் கூட விடவில்லை 7 மீட்டர், 8 மீட்டர் தான் இடைவெளி விட்டு இருக்கிறார்கள். ஆக 50 மீட்டர் இடைவெளி விட வேண்டும். இது தார் சாலை என்பதால், பொதுசாலை (PUBLIC ROAD) என்பதனால் 50 மீட்டர் இடைவெளி விட வேண்டும். அது தான் விதி. அப்படி இல்லாமல் இருப்பது சட்டப்படி விதிமீறல். எனவே, சென்னை உதவி ஆணையர் (நில நிர்வாகம்) அவர்கள், தனியார் பட்டா நிலத்தில் இருந்தாலும், நிலவியல் பாதை, ஓடை, மற்றும் பூஸ்திப் பாதை ஓடை ஆகியவை

பற்றிய வருவாய்த்துறை நிலை ஆணை எண் 26 பிரிவு 15 பற்றிய அரசாணையில், ஓடை மற்றும் பாதை ஆகியவை அரசின் சொத்து என தெளிவாக வரையறுத்து உள்ளது. அந்த ஆணையின் ஆவண நகலும் இதில் நாங்கள் இணைத்து இருப்பதாக தெரிவித்தார். இந்த கிராம வரைபடத்தில் காட்டப்படும் பொதுச்சாலைக்கு சட்டப்படி 50 மீட்டர் இடைவெளி விடாததால் கல்குவாரிக்கு சட்டப்படி அனுமதி தர முடியாது. இவர்கள் வேறு அறிக்கை புதியதாக தயார் செய்யவேண்டும். அனைத்து அனுமதியும் பெற்று புதியதாக வேறு அறிக்கை தயார் செய்து புதியதாக தான் விண்ணப்பிக்க வேண்டும். அதை வேண்டுமென்றால் நீங்கள் பரிசீலனை செய்யுங்கள் என தெரிவித்தார். இந்த அறிக்கை முழுக்க முழுக்க தள்ளுபடி செய்யக்கூடிய தன்மை வாய்ந்தது. எனவே, இந்த கல்குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது, கொடுக்கக்கூடாது. பொதுச்சாலைக்கு போதுமான இடைவெளி விடவில்லை அது ஒன்று. அடுத்ததாக பக்கத்திலேயே ஒரு தாழ்வு அழுத்த மின்சார இணைப்பு போகிறது. அதிலிருந்து 50 மீட்டர் இடைவெளி விட வேண்டும். அந்த கல்குவாரி அமையும் புலத்தின் மேற்குப் பகுதியில் தாழ்வு அழுத்த மின்சார இணைப்பு செல்கிறது. இதற்கு 50 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும். ஆனால் 50 மீட்டர் இடைவெளி விடவில்லை, அந்த இடத்திற்கும் கல்குவாரிக்கும் இடைவெளி இல்லை. அதுதான் உண்மை. நேரில் சென்று பார்த்தால் அந்த இடத்திற்கும் பக்கத்திலே இருக்கிறது. சிறு கனிம சலுகை விதிகள் 1959 சட்டப்படி அனுமதி தருவதற்கு வாய்ப்பில்லை. அரசு நிலத்திற்கு, 10 மீட்டர் (35 அடி) இடைவெளி விட வேண்டும் என சிறு கனிம சலுகை விதிகள் 1959 சட்டம் கூறுகிறது. கல்குவாரி அமையும் புலத்தை சுற்றி புல எண்: 211 என்பது அரசு நிலமாகும். அந்த அரசு நிலத்திலிருந்து பத்து மீட்டர் இடைவெளி விட வேண்டும். ஆனால், அந்த 10 மீட்டர் கூட, கல்குவாரிக்கும் அதற்கும் இடைவெளி இல்லை அப்படியே அடுத்த அடுத்த நிலமாக தொடர்கிறது என்பது தான் யதார்த்த உண்மை. எனவே சிறு கனிம சலுகை விதிகள் 1959 சட்டப்படி அந்த இடைவெளி விடாததினால் இது முழுக்க முழுக்க நிராகரிக்க பட வேண்டிய அறிக்கை. இங்கு அமைய இருக்கும் உத்தேச கல்குவாரிக்கும், அருகாமையில் இருக்கும் கல்குவாரிக்கும் 10 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும். ஆனால், கல்குவாரி புலத்தின் கிழக்கு புறத்தில் புல எண் 210/4 ல் உள்ள கல்குவாரிக்கும் இதற்கும் 10 மீட்டர் இடைவெளி விடப்படாமல், அங்கு கனிமங்கள் ஏற்கனவே வெட்டி எடுக்கப்பட்டு உள்ளது. மேலூர் நல்லையா கல் கல்குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையோடு, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் தெரிவித்துள்ள (Terms of Reference - TOR) 45 வகையான ஆவணங்கள் இணைத்து கொடுத்துத்தான் கருத்து கேட்பு கூட்டத்தை நடத்த

வேண்டும். அப்பொழுது தான் நாங்கள் நிறைய கண்டுபிடித்து என்னென்ன விதிமீறல்கள் எல்லாம் இருக்கிறது என்று பார்க்க முடியும். UDR காலத்தின் தயாரிக்கப்பட்ட Lader உடன் கூடிய புல வரைபடம் கூட, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் வைக்கப் படவில்லை. இதனால் முழு உண்மை தன்மையை அறிய முடியவில்லை இன்னும் நிறைய உண்மைகள் மறைக்க பட்டிருக்கும் என்று நாங்கள் சந்தேகப்படுகிறோம். ஏனென்றால் இதிலேயே நாங்கள் நிறைய விதிமீறல்களை கண்டுபிடித்து உள்ளோம். அதனால் முழுமையான எல்லாம் ஆவணங்களையும் இணைத்த ஒரு அறிக்கையை இதில் இருக்கக்கூடிய விதிமீறல்கள் எல்லாத்தையும் நீக்கிவிட்டு புதிய அறிக்கையை இவர்கள் கொடுத்தால் தான் மீண்டும் இது மாதிரியான புதிய விண்ணப்பத்தை வாங்கி அதன் அடிப்படையில் மீண்டும் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி அதன் பின்பு தான் அனுமதி வழங்க வேண்டும். அதுவரைக்கும் இப்பொழுது இருக்கக்கூடிய இந்த அறிக்கையின் அடிப்படையில் இந்த நல்லையா கல்குவாரிக்கு அனுமதி வழங்குவது முழுக்க முழுக்க விதிமீறல், சட்ட விதிமீறல். சட்டத்திற்கு உட்பட்டு இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்குவது தகுதி அற்றது. எனவே, அனுமதி வழங்கக் கூடாது. அது மட்டும் இல்லாமல் இங்கு நிறைய ஆவணங்களையும் மறைத்தது, மோசடி செய்த விதமாக கருதப்படும். எனவே, அனுமதி வழங்க தகுதியற்றது என்று கூறினார். நமக்கு மணல் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளது. வெறும் ஆயிரம் ரூபாய்க்கு ஒரு கன மீட்டர் மணல் வழங்க தயாராக இருக்கிறார்கள். ஆனால், அரசு அதை இறக்குமதி செய்ய மாட்டேங்கிறார்கள். இயற்கை ஆற்று மணல் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை விட்டுவிட்டு இங்க இருக்கின்ற கனிம வளங்களை முழுவதும் அழித்து மிக மோசமான நிலைக்கு, பல லட்சக்கணக்கான ஆண்டுகளாக இருக்கக்கூடிய மலைகளையும், பாறைகளையும் உடைத்து நாம் என்ன வளர்ச்சி அடைய போகிறோம் என்பதையும் இந்த அரசுக்கும், மக்களுக்கும், அதிகாரிகளுக்கும் நான் கேள்வியாக வைக்கிறேன் என தெரிவித்தார். ஆற்று மணலால் அழியக்கூடிய நாடுகளும் இருக்கிறது. எங்களிடம் அந்த மணல் எல்லாம் அள்ளி வெளியில் கொட்டினால் தான் தண்ணீர் ஊருக்குள் வராமல் எங்களை பாதுகாக்க முடியும் என்கின்ற மஞ்சளாறு என்பது சீனாவின் துயரம் அப்படி என்கிறார்கள். ஆறு முழுவதும் மணல் வந்து நிரம்பி விடுகிறது. தண்ணீர் ஊருக்குள் வருகிறது என்கிறார்கள். அதைப்போல மலேசியாவிலும் சில ஆறுகள் இருக்கிறது. அங்கே இருந்தெல்லாம் மணலை எடுத்து இயற்கை மணலை மக்கள் பாதுகாப்பிற்காக உயிரினங்கள் பாதுகாப்பிற்காக, எடுக்க முடியும். அவற்றை எடுத்து வந்து அதை மிகக் குறைந்த விலையில் கொண்டு வந்து தர தயாராக இருக்கிறார்கள். ஏற்கனவே இருந்த அதிமுக

அரசு ஒரு 50 ஆயிரம் டன் இறக்குமதி செய்தார்கள். அதுபோல் இயற்கை மணலை இறக்குமதி செய்து இந்த நாட்டிற்கு பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் வைத்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுவதாக என்று கூறி தனது எதிர்ப்பு கருத்தினை பதிவு செய்தார்.

10. திரு. பழனிக்குமார், மேலூர்

என் பெயர் பழனிக்குமார் நான் மேலூர் கிராமத்தில் வசிக்கிறேன் எங்கள் ஊருக்கு தொழில் துறை வருவது பற்றி நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம், இருந்தாலும் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு செயல்பட வேண்டுகோள் வைப்பதாக தெரிவித்தார். 500 மீட்டருக்குள் இருக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அது தாராளமாக இருக்கிறது. தாராளமாக இந்த நிறுவனத்தில் அனைத்து இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்பு தரும்படி கேட்டுக்கொள்கிறோம். இந்த அதிகாரிகளுக்கு வேண்டுகோள் என்னவென்றால் மாசு அதிகமாக மாசு கட்டுப்பாடு வாரியம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதை தடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். போர் போட்டு வெடி வைக்க கூடாது. வெடி தான் பயன்படுத்த வேண்டும். அனைவரும் வசிக்கிறோம் அனைவரும் தொழிலை நேசிக்கிறோம். ஒரு ஊருக்கு ஒரு நிறுவனம் வந்தால் எல்லா மனிதர்களும் அதை சார்ந்து ஒன்றி வாழ்கிறோம் எனவே, அதையும் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று கூறி தனது கருத்தினை பதிவு செய்தார்.

11. திரு. எஸ் ராதாகிருஷ்ணன், மேலூர்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நமது இலுப்பூர் கோட்டாட்சியர் அவர்கள் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது அவர்களை வருக வருக என கிராமத்தின் சார்பாக வரவேற்கிறேன். அடுத்து மாசு கட்டுப்பாடு அதிகாரி அவர்களையும் வருக வருக என வரவேற்கிறேன். அடுத்து நமது குளத்தூர் வட்டாட்சியர் அவர்களையும் வருக வருக என கிராமத்தின் சார்பாக வரவேற்கிறேன். அடுத்து நமது சத்தியமங்கலம் வட்ட கிராம நிர்வாக அலுவலர் அவர்களையும் அலுவலர்களையும் வருக வருக என வரவேற்கிறேன். அடுத்து நம்முடைய கிராமத்திலிருந்து இங்கே வருகை தந்திருக்கும் அனைவரையும் வருக வருக என கிராமத்தின் சார்பாக வரவேற்கிறேன். அண்ணார் சொன்னது போல அனைத்தும் இங்கு உள்ளது. ஆனால் இதற்கு முன்னர் உள்ள கல்குவாரிகளுக்கு எப்படி அனுமதி கொடுத்தார்கள். இதே கட்டுப்பாடு தான் உள்ளது அதே இடம் தான் இதற்கு முன்னாடி உள்ள குவாரிகளுக்கு எப்படி அனுமதி கொடுத்தார்கள் சில பேர்

கிராம பாறைகளை ஏலத்தில் எடுத்து தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள். சில பேர் ஏலமே எடுக்காமல் பாறைகளை இன்று வரை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை அதிகாரிகள் யாரும் கண்டு கொள்வதுமில்லை. கீழக்குளம் என்னும் குளமே இல்லாமல் போய்விடும் போன்ற நிலைமையில் உள்ளது. கீழக்குளத்தினுடைய கலிங்கு சுத்தமாக இல்லை. கீழக்குளத்தில் பாதி இல்லை. அதில் ஒரு கருப்பர் கோவில், குளவாய் கருப்பர் கோவில் என்ற கோவில் உள்ளது. இன்னும் சிறிது காலத்தில் அதுவும் இல்லாமல் போய்விடும் அந்த போன்று சூழ்நிலைகள் எல்லாம் நிறைய இருக்கிறது. கீழக்குளத்திற்கு வரும் வாரியும் சுத்தமாக மூடப்பட்டுள்ளது. அந்த போன்று சூழ்நிலைகள் எல்லாம் உள்ளது. அண்ணார் சொன்னது போல எல்லாமே உள்ளது தான். ஆனால், இருந்தாலும் இதே போல் இதற்கு முன்னாடி உள்ள குவாரிகளுக்கு எப்படி அனுமதி கொடுத்தார்கள். அரசு இப்பொழுது ஏன் இவருக்கு அனுமதி கொடுக்ககூடாது எல்லா கல்குவாரிகளையும் நிறுத்தும் பொழுது இவரையும் நிறுத்தலாம். அதனால், இவருக்கு அரசு விதிகளின்படி அனுமதி வழங்கலாம். ஏனென்றால் எல்லோருக்கும் வழங்கிவிட்டு இவருக்கு மட்டும் வழங்கக் கூடாது என்று சொன்னால் அது தவறு என்பதை கூறி விடை பெறுவதாக சொல்லி தனது கருத்தினை பதிவு செய்தார்.

<u>நன்றியுரை:</u>

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை எழுத்துவடிவில், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலோ அல்லது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் புதுக்கோட்டை அலுவலகத்திலோ சமர்பிக்கலாம் என்று தெரிவித்துக் கொண்டார். தி/ள். ம. நல்லையா உடைகல் மற்றும் கிராவல் குவாரி பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்திய வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர் அவர்களுக்கு நன்றி கூறினார். இதர வருவாய் துறை அதிகாரிகள், தி/ள். ம. நல்லையா உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவன உரிமையாளர், திட்ட பிரதிநிதிகள், பணியாளர்கள், காவல்துறை அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள், பத்திரிக்கை நிருபர்கள் மற்றும் கலந்துகொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் நன்றியினை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தெரிவித்துக்கொண்டார்.

கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**இணைப்பு:**

1. கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் வருகை பதிவேடு (அ).
2. திட்ட பிரதிநிதிகளின் நிழற்பட விளக்க உரை (ஆ)
3. கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்த வீடியோ குறுந்தகடுகள் (இ).
4. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு வரைவு விரிவான அறிக்கை மற்றும் தமிழ், ஆங்கிலத்தில் திட்ட சுருக்க உரைகள் (ஈ).
5. எழுத்து வடிவில் பெறப்பட்ட பொதுமக்களின் கருத்துக்கள் (உ) - 1 எண்ணிக்கை.

23/10/24

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்,
புதுக்கோட்டை.

வருவாய் கோட்டாட்சியர்,
இலுப்பூர்.